# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




மன்னா – 11 அக்டோபர் 2021 பிரதி – 7



# ஆயர் மடல்



"என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசாயா 41:10C)

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே!

வழுவாது காப்பவரும், வாழ்வு தருகிறவருமாயிருக்கிற விடுதலையாளர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக நமது திருச்சபையின் போதகராக இறைபணி நிறைவேற்ற கர்த்தர் தந்த கிருபைக்காய் ஆண்டவரை போற்றுகிறேன். இப்பணிப் பொறுப்பை தந்த பேராயருக்கு நன்றி சொல்கிறேன்

திருச்சபை இறைப்பணி என்பது ஒரு தனிநபர் திருப்பணி அல்ல. சபைப் போதகரோடு இணைந்து செயல்பட்ட கமிட்டி அங்கத்தினர்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.

சபைச் செயலர் சகோதரர் திரு. சுஜித் கிளாட்சன் அவர்களது அயராத உழைப்பும், அர்ப்பணிப்பும் ஆலய வளர்ச்சிக்கு பெரும்பங்கு வகித்தது. பொருளராக தனது பணிப்பொறுப்பை எப்போதும் உணர்ந்தும் உண்மையாகவும் நிறைவேற்றிய திரு. அலெக்ஸ் பாஸ்கர், கணக்கராக திரு. கனகவேல் அவர்கள் விசுவாசத்தோடு செயல்பட்ட பணிகள், எளிமையாயிருந்து அமைதியாய், உற்சாகமாய் செயல்பட்டு திருச்சபை வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்த திரு. விக்டர் தயாசிங், திரு. ராபின் தேவதாஸ், திருமதி. மகிழா ஜெங்கின் அனைவரின் திருப்பணி உடன்பங்கேற்புக்காய் நன்றிகள்.

பாடல்குழு இயக்குனராய், பாலைவன மன்னா அச்சிட உதவியாய் பணிப்பளுவின் மத்தியிலும் இறைப்பணியை தாங்கி நிற்கும் சகோதரர் திரு. பென்சாம் குடும்பத்தார்க்கும் என் வாழ்த்துக்கள்.

உடன் ஊழியங்களில் திருமறைப்பள்ளி – திருமதி. பூபதி பாஸ்கர், பெண்கள் சங்கம் - திருமதி. சாரா ராஜாசிங், ஆண்கள் சங்கம் - திரு. சைலஸ் பொறுப்புக்களில் சிறந்து செயல்பட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

இறைமக்களின் இசைவான பணி மிகவும் மகிழ்ச்சியாய் அமைந்தது. இக்கட்டான காலக்கட்டங்களிலும், இன்முகத்தோடு காணிக்கை கொடுப்பதும் தொழுகைகளில் பங்குபெறுவதும்தாண்டி இணைந்து செய்வோம் என கரம்கோர்த்து கொண்டீர்கள். நினைவலைகளில் நீங்கா இடம் பெறுகிறீர்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஆலயம் ஆண்டவருடையது. ஆலயத்தின் செயல்பாடுகள், இறைப்பணி திட்டங்களில் ஆண்டவர் நம்மை பயன்படுத்துகிறார். இறைப்பணியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் இல்லை. துதிக்கும் அனைவருமே தூயவர்முன் சமமே என்னும் உணர்வை வளர்த்திக்கொள்வோம். பணம், பதவி, படிப்பு, பட்டம் இதைத் தாண்டிய நிலையில் நம் வாழ்க்கை இயேசு கிறிஸ்துவோடு பயணிக்கும் பயணம் என்பதை உணர்ந்து கொள்வோம்.

வாழ்க்கை ஒரு சிறந்த பேருந்து பயணம். நாம் பயணத்தில் பலரை பார்க்கிறோம், பலரிடம் பேசுகிறோம், பலரிடம் பழகுகிறோம், சிலரோடு சிலகாலம் பயணிக்கிறோம். ஒருசிலரோடு நெடுந்தூரம் பயணிக்கிறோம். சில அனுபவங்கள் நமக்கு மாறாத வடுக்களை காயங்களை ஏற்படுத்தி விடுகிறது. சில அனுபவங்கள் நினைத்து நினைத்து மகிழப்பண்ணுகிறது.

ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளுங்கள், நம் வாழ்க்கை பயணத்தில் நம்மோடு பயணிப்பவர்க்கு இடையூறோ, இன்னலோ ஏற்ப்படுத்த வேண்டாம். ஏனெனில் பயணத்தில் ஓட்டுனர் இயேசு கிறிஸ்து. கவனிப்பார், கண்டிப்பார், இறக்கி விட்டுவிடுவார். கனிவாய் பேசுவோம்! கண்ணியமாய் நடந்துகொள்வோம்! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே முன்வைத்து பயணிப்போம்.

கர்த்தர் நம் வாழ்வில் தந்திருக்கும் கொஞ்சகாலம் இயேசுகிறிஸ்துவுக்காய் வாழுவோம். வருகையின் நாளில் மறுமையில் இறை ராஜ்யம் இணைவோம் என்னும் நம்பிக்கையோடு வாழ்வை தொடர்வோம்.

போதகர் மற்றும் போதகர் குடும்பம் சார்பில் அன்போடு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி என்றும் உங்கள் நினைவலைகளுடன் விடைபெறுகிறேன் தொடர் பணியின் இறைத்திட்டத்திற்காய்…..

நன்றி,

இப்படிக்கு,

**போதகர் மற்றும் போதகர் குடும்பம்**

**Rev. Dr. N. ஜெசின்**

## நற்கனி

நற்கனிகள் என்னும் தலைப்பில் நாம் இணைந்து சிந்திக்க ஆற்றல் தந்த ஆண்டவரைப் போற்றுவோம்.

பொதுவாக கனிகள் என்பவை மக்களால் அதிகம் விரும்பப்படுபவை மட்டுமல்ல அதிகம் பயன்படுத்தப்படுபவை என்று கூட சொல்ல இயலும். எனவேதான் இந்திய தேசிய பழம் என்றால் மாம்பழம் என்றும், தமிழ்நாட்டு மாநிலப்பழம் என்றால் பலாப்பழம் என்றும் நாம் வைத்திருக்கிறோம். கனிகளில் முக்கனியின் சிறப்பு பற்றியும் அதிகமாக பேசுகிறோம். மா, பலா, வாழை இவை மூன்றும் உடலுக்கும், உடல்நலத்துக்கும் பெரிதும் பயனளிப்பவையாக அமைகிறது.



ஆன்மீக வாழ்வுக்கு அதிகமாக பயனளிப்பவை எக்கனிகள் என திருமறையில் ஆய்வோமாயின் திருமறை நமக்கு காட்டுகின்ற முதல் பாடம் மத்தேயு 7:16-ல் “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சைப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறீர்களா? அப்படியே நல்ல மரமெல்லாம் நல்லக் கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரமோ கெட்டக் கனிகளைக் கொடுக்கும்”.

நம்முடைய கனிகளினால் நாம் அறியப்படுகின்றோம் என்பதுதான் அடிப்படை செய்தியாக அமைகிறது. திருமறையில் இரண்டு விதமான கனிகள் சுட்டிக்காட்டப்படுகிறது.

### 1. உலகத்துக்கான கனி:-

“நாம் மாமிசத்துக்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பல இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளை கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது” (ரோமர் 7:5).

உலகத்துக்கான கனி மாம்சத்துக்கான கனியாகும். மாம்சத்துக்கான கனி இச்சைகளுக்கு ஏதுவான கனி, இக்கனி மரணத்தை பிறப்பிக்கும் கனியாய் மாறுகிறது. ஓசியா தீர்க்கதரிசி இஸ்ரவேல் மக்களுக்கு கூறும்போது ஓசியா 10:12-ல் “நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள் தயவுக்கு

ஒத்ததாய் அறுப்பு அறுங்கள்" என்று அழைக்கிறார். ஆனால் மக்கள் எப்படி இருக்கிறார்கள் என அடுத்த வசனத்தில் கூறும்போது, "அநியாயத்தை உழுதீர்கள்; தீவினையை அறுத்தீர்கள், பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள்".

உலகப்பிரகார நன்மைகளைப் பெறவேண்டி நாம் செய்யும் முயற்சிகளையும், தவறுகளையும், பொய்யின் கனியாகவும், அழிவின் கனியாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

"நல்லமரம் கெட்ட கனிகளை கொடுக்கமாட்டாது. கெட்டமரம் நல்ல கனிகளை கொடுக்கமாட்டாது. நல்லக் கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (மத்தேயு 7:18,19)

நல்ல கனிகொடுக்க படைக்கப்பட்டிருக்கும் நாம் கெட்ட கனிகளை கொடுப்போமாயின் நித்திய ஆக்கினைக்கு தீர்க்கப்படுவோம்.

## 2. உன்னதத்துக்கான கனி:-

தேவராஜ்ஜியம் நல்ல கனி கொடுப்பவர்களுக்கே எனத் திருமறை வலியுறுத்துகிறது.

"தேவனுடைய ராஜ்ஜியம் …… அதற்கு ஏற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத்தேயு 21:43). நல்ல கனி நம்மை நித்திய ஜீவனுக்கும், தேவ ராஜ்ஜியத்துக்கும் செல்ல வழிவகுக்குகிறது. காரணம் என்ன என்று நாம் திருமறையில் ஆராயும்போது யாக்கோபு 3:17-ல் "பரத்திலிருந்து வரும் ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதம் இல்லாததாயும் மாயமற்றதாயுமாயிருக்கிறது.




பரலோகமும், பரலோகத்துக் குரியவைகளும் நற்கனிகளால் நிறைந்ததாயுள்ளது. எனவே கர்த்தரில் கனிகொடுக்க அழைக்கப்பட்டுள்ளோம். "நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (மத்தேயு 15:5).

கர்த்தரில் நிலைத்திருந்து கனிகொடுக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

எனவே மத்தேயு 3:8-ல் கூறியபடி மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுப்போம். கிறிஸ்துவில் நிலைத்திருந்து கனிகொடுப்போம். இப்படி கனிகொடுக்க நம் வாழ்வு முழுதும் கர்த்தர் நம்மை வழிநடத்துவாராக.

புதிய மாதத்தின் புதிய ஆசிகளால் கர்த்தர் உங்கள் அனைவரையும் வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**

## மகளிர் பகுதி

### "உறுதியான அஸ்திபாரம் உண்மையான கனிதரும்"

தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. (2தீமோ. 2:19).

ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் அக்டோபர் மாத வாழ்த்துக்கள்.



மனித வாழ்வுக்கு அடிப்படை ஒன்று அஸ்திபாரம். குடும்பமாயினும், கட்டிடமாயினும், மரங்களாயினும், இல்லங்களாயினும், திருச்சபையாயினும் அஸ்திபாரம் உறுதியாக இருந்தால் மட்டுமே நிலையாய் இருக்கும். மரங்கள் அதிகமாக கனிகொடுக்க வேர் பகுதியில் உரமிடுகிறோம். ஏனெனில் வேர்கள்தான் மரத்தை தாங்கவேண்டும். மரத்துக்கு உணவளிக்கவேண்டும். இதுபோல அஸ்திபாரம் கட்டிடத்துக்கு மிக இன்றியமையாதது.

ஐரோப்பா தேசமொன்றிலே மிகப்பெரிய கட்டிடம் ஒன்று நவ நாகரீகமான முறையில் கட்டப்பட்டு வெகு நேர்த்தியாக காணப்பட்டது. ஆனால் அது யாருக்கும் உபயோகமில்லாமல் அரசாங்கத்தினால் முத்திரை போடப்பட்டிருந்தது. காரணமென்னவென்றால் அவ்வீட்டைக் கட்டி எழுப்ப ஆரம்பிக்கும்போது ஒருவர் வாங்கின லஞ்சத்தின் விளைவாக மிகவும் மோசமாக அஸ்திபாரம் போட்டு விட்டார்கள். அஸ்திபாரம் உறுதியானதா என்று கவனிக்காத எஞ்ஜினியர்கள் அதின்மேல் வேகமாக கட்டிடத்தைக் கட்டி எழுப்பினார்கள். ஆனால் சில நாட்களுக்குள்ளேயே கட்டிடம் ஆட்டம் கண்டது.

இதற்கான காரணம் அதை பொறுப்பெடுத்து செய்தவர்களுக்கு உத்தம குணமில்லை. தங்களது உண்மை தன்மையை லஞ்சத்திற்கு விற்றுவிட்டார்கள். எவ்வளவு பணம் செலவழித்து என்ன பயன்? எல்லாம் வீணானது. அதேப் போல சரியான குடும்ப உறவுகளை கட்டி எழுப்புவதற்கு சரியான அஸ்திபாரம் தேவை.

## கீழ்ப்படிவது ஓர் அஸ்திபாரம்:-

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் அஸ்திபாரம் கொலோசெயர் 3:18-20 வரை உள்ள வசனங்களில் அடங்கியுள்ளது. அவைகள் கணவன் மனைவியிடம் அன்புகூருவதும், மனைவி கணவனுக்கு கீழ்ப்படிவதும், பிள்ளைகள் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிவதும் மற்றும் பெற்றோர் பிள்ளைகளை கோபமூட்டாதிருப்பதும் ஆகும். குடும்பத் தலைவன் தேவையில்லாத காரியத்திற்கு அதிகமாய் கோபப்படுவது, ஆணவமாய் நடந்துகொள்வது, அளவுக்கதிகமாய் அதிகாரம் செலுத்துவது போன்றவை குடும்பக் கட்டுமானத்தை கெடுக்கும். பணத்தைக் குடியிலும், வெறியிலும், புகைப்பதிலும், சீட்டாட்டத்திலும் தேவையற்ற நண்பர்களை சேர்த்துக்கொண்டு செலவழிப்பதிலும் இருந்தால் அந்தக் குடும்பம் எப்படி முன்னுக்கு வரமுடியும்?

கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பெற்றோரைக் காணும் பிள்ளைகள் கர்த்தருக்கு பயந்து நடக்கத் துவங்குகிறது. செய்யாதே என்பதைக் காட்டிலும் செய்யாமல் இருந்து பிள்ளைகளுக்கு முன்மாதிரியாயிருப்பதே அடித்தளம் உறுதியாக வாய்ப்பளிக்கிறது. அத்தோடு கீழ்ப்படிதலும் அன்பும் இணைந்து செயல்பட வேண்டும்.

## அன்புகூருதல் ஓர் அஸ்திபாரம்:-

கணவன் மற்ற பெண்களிடத்தில் அல்ல, மனைவியினிடத்தில் அன்புகூரும்படியாக வேதம் நமக்கு போதிக்கிறது. அதுப்போல மனைவி குடும்பத்தின் அதிகாரிபோல நடக்கிற வீடுகள் உண்டு. குறிப்பாக கணவனைவிட கூடுதல் சம்பளம் வாங்கும்போது அப்பிரச்சனை ஏற்பட வாய்ப்பு அதிகம். வேதத்தின்படி கணவனே குடும்பத்தின் தலையாக இருக்கவேண்டும். கணவனுக்கு கீழ்ப்படிந்தவளாக மனைவி காணப்படவேண்டும். நான் வைத்தததுதான் சட்டம் என்றும், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் அறிமுகமில்லாத ஆண்களோடு மணிக்கணக்கில் பேசுவதும் குடும்ப உறவை முறிக்கிற காரியங்கள், கணவனுக்கு விருப்பமில்லாத காரியங்களில் மனைவி ஒருபோதும் ஈடுபடக்கூடாது. இல்லாத பட்சத்தில் குடும்பத்தின் அஸ்திபாரம் ஆட்டம் காணும்.

அதைப்போல பிள்ளைகளை கீழ்ப்படிய சிறுவயது முதல் பயிற்றுவிக்க வேண்டும். தேவையானால் வசனத்தின்படி பிரம்பையும் பயன்படுத்தக்கூடிய உறுதி பெற்றோருக்கு தேவை. மற்றவர்கள் பிள்ளைகளை குறித்து குறைகளை சொல்லும்போது, என் பிள்ளை அப்படித்தான் இருப்பான். உன் பிள்ளைகளை நீ பார்த்துக்கொள் என்கிற அநாவசியமான வார்த்தைகளை கொட்டக்கூடாது. அந்த தவறு பிள்ளையிடம் இருக்கிறதா என்றுப் பார்த்து அதை திருத்த முயற்சிக்க வேண்டும். ஏதோ நம் பிள்ளைகள் வானத்தில் இருந்து வந்த தேவதூதர்களைப்போல நினைத்து அவர்களை சத்தம் போடவே பயப்படுகிற பெற்றோர் இருக்கிறவரை பிள்ளைகள் கெட்டுப்போக சந்தர்ப்பங்கள் அதிகம் உண்டு. பிள்ளைகளை கண்டிக்கிற அதே நேரத்தில் அன்பும் செலுத்தவேண்டும்.

பிரியமானவர்களே! வேத வசனத்தின்படி அமைக்கப்படும் குடும்பம் உறுதியாக அஸ்திபாரம் போடப்பட்ட வீட்டைப் போன்றது. அவ்வப்போது சிறுசிறு சண்டைகள் வரலாம். ஆனால் வீடோ அசையாது. கணவன், மனைவி, பிள்ளைகள் இவர்களுக்குத் தேவன் கொடுக்கும் இந்த எளிய ஆலோசனைகளை கைக்கொள்ளுவோம்.

## ஜெபம் ஓர் அஸ்திபாரம்:-

குடும்பம் ஒரு கனியுள்ள மரத்தைப்போல கனிகொடுக்க வேண்டுமாயின் உறுதியான வேர்கள் நிறைந்ததாயுள்ள மரத்தைப்போல குடும்பத்தின் அடித்தளம் உறுதியாயிருக்கவேண்டும். கிறிஸ்துவில் கட்டப்பட்ட கட்டிடமாய் ஜெபத்தோடு குடும்பத்தை கட்டி எழுப்புவோம்.

எங்கள் அன்பின் பரலோக தகப்பனே, மனிதன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று அவனுக்கு ஏற்ற துணையை கொடுத்த நல்ல தெய்வமே என ஆண்டவருக்கு நன்றி செலுத்துவதோடு நம் பிள்ளைகள் ஜெபத்திலே வளர ஊக்குவிப்போம். ஜெபத்திலே எபபடி வளர ஊக்குவிப்பது எனக் கேட்கும் பெற்றோரைப் பார்த்திருக்கிறேன். தினமும் இரவு குடும்ப ஜெபம் செய்யுங்கள். திருமறை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள். தேவைகளுக்காக அடம்பிடிப்பதை விட்டு இயேசப்பாவிடம் கேள் என்று சொல்லித் தாருங்கள். விசுவாச வாழ்வை விதையுங்கள்.

காலையில் எழுந்ததும் ஜெபித்தாயா? திருமறையின் எந்தப் பகுதி படித்தாய் என்று கேளுங்கள். பள்ளிப் பாடங்களை படிக்குமுன் 5 வசனத்தையாவது படித்து ஜெபித்து பள்ளிப்பாடங்களை படிக்க ஆலோசனை கூறுங்கள். நம்முடைய இல்லம் ஜெபத்தினால் கட்டப்படும் இல்லமாக மாற்றுவோம்.

வேத வசனத்தினால் அஸ்திபாரம் போடப்பட்ட கிறிஸ்துவையே நம் குடும்பத்தின் அஸ்திபாரமாக வைத்துக் கட்டுவோம். அந்த வீடு, அசையாததாக உறுதியானதாக என்றென்றும் நிலைத்திருக்கிறதாக இருக்கும். ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள்~நீலகண்ட சுப்பையாதாஸ்

### இயேசுவை நம்பு

மண்ணில் :
விண்ணில் :
ஊர் :
நாடு : இந்தியா
தரிசன பூமி : இந்தியா

இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்தவர்கள் ஒருபோதும் அமைதியாக இருக்கமுடியாது. தாங்கள் பெற்ற இன்பத்தையும், ஆனந்தத்தையும் அவர்களால் அடக்கி வைக்கமுடியாது.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பழமொழிக்கேற்ப அவர்கள் பிறருக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பை அறிவித்துக்கொண்டே இருப்பார்கள். சுனையிலிருந்து சுரக்கும் நீர்போல பிறருக்கு பயன்பட்டுக் கொண்டும் இருப்பார்கள்.

இயேசு கிறிஸ்துவின் அன்பை ருசித்த நீங்கள் இதனை உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்துகிறீர்களா?

நீலகண்ட சுப்பையா தேவதாசன் தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு பிராமணர். இவர் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட்டு, முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். கிறிஸ்துவின் அன்பு இவரை நெருக்கி ஏவியது. எனவே, பட்டி தொட்டிகள் அனைத்தும் சுற்றித்திரிந்து கிறிஸ்துவைப் பற்றி போதிக்கத் துவங்கினார். ஏழையோடு ஏழையாக தன்னையும் இணைத்துக்கொண்டு அவர்களோடு வாழ்ந்து, அவர்கள் கொடுத்த கூழை உட்கொண்டு, கிறிஸ்துவாக வாழ்ந்து காட்டினார்.

ஒருமுறை அவர் வசித்த கிராமத்தின் வழியாக மாட்டு வண்டியில் ஒருவர் பிரயாணம் பண்ணிக்கொண்டு சென்றார். அவரைக் கண்டதும், இவர் அவ்வண்டியின் பின்னால் ஓடோடிச் சென்றார். அவருக்கு கிறிஸ்துவைப்

பற்றி சாட்சி பகர்ந்தார். கிணற்றின் அருகே தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கும் ஸ்திரீகளைக் கண்டாலும் அவர்களுக்கும் கிறிஸ்துவின் அன்பைப் பற்றிச் சொல்லுவார். தான் அணிந்திருந்த நீண்ட குர்தா போன்ற உடையில் முன்னேயும் பின்னேயும் "இயேசுவை நம்பு" என்ற வாசகத்தை எழுதியிருந்தார். இதனால் இதனை காண்பவர்கள் இயேசுவைக் குறித்து மேலும் அறிந்துகொண்டு அவர் பிள்ளையாக மாறத் துவங்கினர்.

இம்மாமனிதரே, கன்னியாகுமரியில் உள்ள நாகர்கோவில் சபைக்கு குருவாயிருந்தவர். இவர் நீதிமானாக வாழ்ந்ததால் திருநெல்வேலி கிறிஸ்தவர்களுக்கு ஆவிக்குரிய நன்மைகள் ஏராளமாக கிடைத்தன. இயேசுவின் வார்த்தைகளை செயலிலே வாழ்ந்த உத்தமர் இவர்.

அன்பரே! பிறர் இயேசு கிறிஸ்துவை நம்புவதற்கு என்ன முயற்சிகளைச் செய்கிறீர்கள்?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** தன்னை முழுவதும் அர்ப்பணித்து, சுயத்தை வெறுத்து செய்யப்படும் பணியே, சுவிசேஷப் பணியாகிய மிஷனெரிப்பணி – வேதாகம நண்பன்

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! உம்மீது நம்பிக்கை வைத்து, பிறரையும் உம்மை நம்பச் செய்ய இன்றுமுதல் பாடுபடுவேன்.

**தியானத்திற்கு:- 1 நாளாகமம் 17, எசேக்கியேல் 29, கலாத்தியர் 3-4**

## நற்கனி தரும் செடி

கனி தரும் செடி மனுஷருக்கும், மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் எவ்வளவு ஆசீர்வாதமாய் விளங்குகிறது! கனியற்ற மரத்தை யாரும் நாடுவதில்லை. அது வெட்டப்பட்டு விறகுக்குதான் பயன்படும். அப்படியே கர்த்தர் நம்மை கனி தரும் மரமாக அநேகம்பேருக்கு ஆசீர்வாதமாக வைக்க விரும்புகிறார். நம்மில் இருந்து ஜீவ நீரூற்று புறப்பட்டு வர வேண்டும். நம்மைத் தேடி ஆயிரமாயிரமான மக்கள் ஓடி வந்து தாகம் தீர்க்கப்பட வேண்டும்.

இயேசு கிறிஸ்து ஒரு கனிதரும் செடியாக இருந்தார் அல்லவா? நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே நன்மை செய்கிறவராகவும் பிசாசின் பிடியில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார்.(அப்.10:38)

ஒரு ஊரில் ஒரு ஏழை பிச்சைக்காரன் வனாந்தரம் வழியாக சென்றபோது பட்டுப்போன ஒரு மரத்தைக் கண்டான். துயரத்தோடு அதன் அடிவாரத்தில் உட்கார்ந்து, “மரமே மரமே நீயும் ஒருவருக்கும் பிரயோஜனம் இல்லாதவன். நானும் ஒருவருக்கும் பிரயோஜனமில்லாத பட்டுப்போன மரம்போல இருக்கிறேன். நீயும் ஒரு காலில் தான் நிற்கிறாய். நானும் நொண்டியானபடியால் ஒரு காலில்தான் இருக்கிறேன். உன்னுடைய வாழ்க்கையும் துயரம் உள்ளது. என்னுடைய வாழ்க்கையும் துயரம் மிக்கது. ஆகவே நாம் நண்பர்களாய் இருப்போம்” என்று சொல்லிவிட்டு பிச்சை எடுக்க வேறு ஒரு ஊருக்குச் சென்றான்.



ஆறு மாதங்கள் கழித்து அதே பக்கமாய் வந்தபோது, பட்டுப்போன நிலையில் இருந்த அந்த மரம் துளிர்த்து நிறைய இலைகளும், பூக்களும் உள்ளதாக மாறி கனிகொடுத்துக் கொண்டிருந்தது. ஏராளமான பறவைகள் அந்த மரத்தில் இருந்தன. அதைப் பார்த்ததும் அவனுக்கு ஒரு நம்பிக்கை பிறந்தது. “பட்டுப்போன மரம் போல இருந்த அந்த மரத்தை கனிகொடுக்க செய்த கடவுள் என் வாழ்க்கையையும் மாற்றுவார்” என்ற விசுவாசம் உண்டாயிற்று.

ஊருக்குத் திரும்பி வந்தபோது ஒரு போதகர் அவனை கர்த்தருக்குள் வழிநடத்தினார். இரட்சிக்கப்பட்டான். ஜெபவீரன் ஆனான். கர்த்தர் ஆவியின் வரங்களை அவனுக்குக் கொடுத்த போது அந்த வரங்களினால் நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களை ஆதாயம் செய்தான். நற்கனியுள்ள மரமாய் மாறிவிட்டான்.

எந்த மனுஷனையும் மாற்றுகிறவர் நம்முடைய ஆண்டவர். “உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிராகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி” (யோவான் 1:9). எந்த மனுஷனையும் புறம்பே தள்ளாதவர். எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிலைநிறுத்த வல்லமையுள்ளவர் (கொலோ 1:28). அவரே உங்களை நற்கனி தரும் செடியாக மாற்றுகிறவர்.

நாம் கனி தரும் செடியாக விளங்க நினைக்கும்போது அநேகருடைய பொறாமைக்கும், பழிசொல்லுக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் ஆளாகக்கூடும். “உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது; பொறாமையோவென்றால், அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்?” (நீதி.27:4)

“மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக்கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது”(பிர.4:4). ஒரு பக்கம் மனிதரின் பொறாமை இருந்தாலும் மறுபக்கத்தில் கர்த்தர் உங்களை கனிதரும் செடியாக உயர்த்தியருளுவார்.

யோசேப்பு கனிதரும் செடியாய் இருந்ததினாலே முழு எகிப்தியரும் பஞ்ச காலத்தில் யோசேப்பை நோக்கி ஓடி வந்தார்கள். யோசேப்பின் சகோதரர்களும் தகப்பனும் கூட அவனைத் தேடி ஓடிவந்தார்கள்.

ஆம் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது நம்மை பகைத்தவர்களும் நம்மைத் தேடி வரும்படிச் செய்வார். நம் சத்துருக்களின் மத்தியிலே நமக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி நம் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவார். நம் பாத்திரம் நிரம்பி வழியும். ஆகவே நாமும் ஒரு நற்கனி கொடுக்கும் செடியாய் வாழ முயற்சிப்போம்.

ஆம் கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்கும்போது நம்மை பகைத்தவர்களும் நம்மைத் தேடி வரும்படிச் செய்வார். நம் சத்துருக்களின் மத்தியிலே நமக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி நம் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவார். நம் பாத்திரம் நிரம்பி வழியும். ஆகவே நாமும் ஒரு நற்கனி கொடுக்கும் செடியாய் வாழ முயற்சிப்போம்.

- **V.G மஹிழா ஜெங்கின் ராஜ்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ அக்டோபர் 2021

| | | |
|---|---|---|
| 01-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sujatha Shalini Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Kasi Raja |
| 08-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sumi Vinobha |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Livingston |
| 15-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Thamari Johnson |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Michael |
| 22-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Vanitha Rani Prince |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Mohan Babu |
| 29-10-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Virgin Jegatha Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Nalam Dimalson |

## அக்டோபர் 2021 மாத கேள்விகள்

### (ரோமர் அதிகாரம் 1 முதல் 8 முடிய)

1. கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பில்லாத பலன் எது?
2. ஜீவனும் சமாதானமும் எது?
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டாகும் தேவனுடைய கிருபை வரம் எது?
4. யாரிடத்தில் பட்சபாதமில்லை?
5. பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாயிருக்கிறது எது?
6. கோபாக்கினையை உண்டாக்குகிறது எது?
7. ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு என்ன தீர்ப்பில்லை?
8. காணப்படாதவைகளாக பவுல் எதைக் குறிப்பிடுகிறார்?
9. பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன் யார்?
10. எது இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்கும்?
11. கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டவன் யார்?
12. தேவனுக்கு விரோதமான பகை எது?
13. யாருடைய மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்?
14. பரிசுத்த ஆவியினாலே நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது எது?
15. அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கு வருவது எது?
16. வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறவர் யார்?
17. பாவம் பெருகின இடத்தில் அதிகமாய் பெருகினது எது?
18. விரும்புகிற எதை செய்யாமல், விரும்பாத தீமையை செய்கிறேன் என்று பவுல் கூறுகிறார்?
19. நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்திரவாளிகளானால் வீணாய்ப்போவது எது?
20. பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகளானதினால் கிடைக்கும் பலன் என்ன?

## செப்டம்பர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மரணம் - 1கொரி. 15:26
2. பேய்களுக்கே – 1கொரி. 10:20
3. அப்போஸ்தலரை – 1கொரி. 12:28
4. போரடிக்கிற மாட்டின் - 1கொரி. 9:9
5. நியாயப்பிரமாணம் - 1கொரி. 15:56
6. அன்பு இல்லாவிட்டால் - 1கொரி. 13:1
7. உக்கிராண உத்தியோகம் - 1கொரி. 9:16,17
8. புல்லாங்குழல், சுரமண்டலம் - 1கொரி. 14:7
9. அலங்கரிப்பு – 1கொரி. 12:24
10. ஸ்தேவானுடைய வீட்டார் - 1கொரி. 16:15
11. நிறைவானது வரும்போது – 1கொரி. 13:10
12. கிறிஸ்து – 1கொரி. 10:4
13. ஜென்ம சரீரம் - 1கொரி. 15:46
14. மகிமையாய் - 1கொரி. 11: 7
15. தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் - 1கொரி. 14:4
16. அழிவில்லாத கிரீடத்தைப் - 1கொரி. 9:24,25
17. தேவனுடைய ஆவியினாலே பேசுகிறவன் - 1கொரி. 12:3
18. ஆகாத சம்பாஷணைகள் - 1கொரி. 15:33
19. பாம்புகளால் - 1கொரி. 10:9
20. கிறிஸ்துவுக்குள் - 1கொரி. 15:22

## செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Manju Martin |
| Mrs. Aspin Bejo | Mrs. Mary Praveena Gobinath |
| Mrs. Boopathi Baskar | Mrs. Percy Jean |
| Mrs. Felsi Rani John | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Shiney Johan |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Thamari Johnson |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Josephin Anto Kingston | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Leela Gladson | |

## அக்டோபர் 2021 மாத கேள்விகள்

### (எரேமியா 5 முதல் 14 முடிய)

1. பிசின் தைலம் கிடைக்கும் இடம் எது?
2. இருப்புகாளவாயாகிய தேசம் எது?
3. கர்த்தருடைய ஆத்துமாவுக்கு அரோசிகமாயிருந்த தேசம் எது?
4. மெய்யான தெய்வம், ஜீவனுள்ள தெய்வம், நித்திய ராஜா யார்?
5. எதன்மேல் அடையாளமாகத் தீவெளிச்சந் காட்டுங்கள் என்று பென்யமீன் புத்திரருக்கு கூறப்பட்டது?
6. தன் தோலை மாற்ற முடியாதவன் யார்?
7. மண்மேடுகளும், வலுசர்ப்பங்களின் தாபரமுமாக்குவேன் என்று கர்த்தர் எதைச் சொல்லுகிறார்?
8. அலைகளுக்கு கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக இருக்கும் எல்லை எது?
9. யாருக்கு பணியாரங்கள் சுடும்படி பிள்ளைகள் விறகு பொறுக்கினார்கள்?
10. எரேமியா அரைக்கச்சையை எங்கு ஒளித்து வைத்தான்?
11. கூர்மையாக்கப்பட்ட அம்பு எது?
12. யாருடைய பிரயாசம் விருதாவாய்ப் போயிற்று?
13. கர்த்தர் காற்றை எங்கிருந்து புறப்படப்பண்ணினார்?
14. இன்னோம் குமாரனின் பள்ளதாக்கு எவ்வாறு அழைக்கப்பட்டது?
15. இருதயத்தை சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி யார்?
16. யார் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்டக்கூடாது?
17. விசாரிக்கப்படவேண்டிய நகரம் எது?
18. குதிரைகளின் மூச்செறிதல் எங்கிருந்து கேட்கப்படுகிறது?
19. கர்த்தரின் சுதந்திரமான கோத்திரம் எது?
20. கர்த்தருடைய நாமம் விளங்கப்பண்ணின ஸ்தலம் எது?

## செப்டம்பர் 2021 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. மேனி – ஏசாயா 65:11
2. எருசலேம் - எரேமியா 3:17
3. கைவிடப்படாத நகரம் - ஏசாயா 62:11,12
4. பூமி – எரேமியா 4:23
5. சர்ப்பத்துக்கு – ஏசாயா 65:25
6. பெண்ணொட்டகம் - எரேமியா 2:23
7. நகைகளினால் - ஏசாயா 61:10
8. வனாந்தரமாயின – ஏசாயா 64:10
9. தாணிலிருந்து – எரேமியா 4:15
10. முரட்டாட்டமான ஜனம் - ஏசாயா 65:2
11. ஆனதோத் - எரேமியா 1:1
12. சீயோன், எருசலேம் - ஏசாயா 62:1,2
13. அரபியன் - எரேமியா 3:2
14. சத்துருக்கள் - ஏசாயா 63:18
15. நோப், தகபானேஸ் - எரேமியா 2:16
16. சாரோன் - ஏசாயா 65:10
17. தீக்காற்று – எரேமியா 4:11
18. பூமியிலே ஆணையிடுகிறவன் - ஏசாயா 65:16
19. அக்கிரமங்கள் - ஏசாயா 64:6
20. தூபங்காட்டுகிறவன் - ஏசாயா 66:3

## செப்டம்பர் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Johan Pratheep |
| Mr. Anu | Mr. Justus Martin |
| Mr. Bejo Nelson | Mr. Lenin Raj |
| Mr. Daniel Raj P. | Mr. Prince J. P. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Ramesh R. |
| Mr. Jino John | Mr. Robin Devadhas |

## May God Bless All

# Birthday Celebrants – October 2021

| | |
|---|---|
| 01st October | Mr. Robert Dhas |
| 02nd october | Mrs. Maria Tracy, W/o Mr. Gnana Ruban |
| 03rd October | Miss. Josena Broose, D/o Mr. Jegan Broose |
| 09th October | Miss. Evana Afreen, D/o Mr. Nalam Dimalson |
| 11th October | Mr. Kanagavel |
| 11th October | Master. Jerrin John, S/o Mr. Arumainayagam Rajasingh |
| 12th October | Mrs. Sumimol, W/o Mr. Vinobha |
| 13th October | Mr. R. Ramesh |
| 14th October | Mr. Jude Dennis |
| 16th October | Mr. Jerry Sathya |
| 17th October | Mr. Bensam |
| 19th October | Mrs. Sarah, W/o Mr. Arumainayagam Rajasingh |
| 20th October | Mr. Lejo Salvin, S/o Mr. George |
| 21st October | Mrs. Manju, W/o Mr. Justus Martin |
| 23rd October | Mrs. Vency Deepa, W/o Mr. S.Kannan |
| 24th October | Mrs. Vimala, W/o Mr. Selvamani |
| 24th October | Miss. Sherly Grazila, D/o Mr. Selva Kumar |
| 28th October | Mrs. Ashika Sharon, W/o Mr. Joel |
| 28th October | Miss. J. Keziah Jesha, D/o Mr. Jerry Jones |
| 30th October | Mr. Ajin |
| 31st October | Mrs. Sapthekha, W/o Mr. Jerry Sathya |

# Wedding Day Anniversaries – October 2021

| | |
|---|---|
| 30th October | Mr. T. Raju & Mrs. Sujithra |

## தமிழுக்கு தேன் என்றொரு பெயர் உண்டு, காரணம் ஏன் தெரியுமா?

தேன் கொண்டுவந்தவரைப் பார்த்து, நேற்று ஏன் தேன் கொண்டு வரவில்லை என்று ஒருவர் கேட்கிறார்.

அதற்கு அவர் கூறிய இனிமை பொருந்திய விடை;

"ஐயா நீங்கள் கூறியதை நினைத் **தேன்**
கொல்லிமலைக்கு நடந் **தேன்**
பல இடங்களில் அலைந் **தேன்**
ஓரிடத்தில் பார்த் **தேன்**
உயரத்தில் பாறைத் **தேன்**
எப்படி எடுப்பதென்று மலைத் **தேன்**
கொம்பொன்று ஒடித் **தேன்**
ஒரு கொடியைப் பிடித் **தேன்**
ஏறிச் சென்று கலைத் **தேன்**
பாத்திரத்தில் பிழிந் **தேன்**
கொண்டு வந்ததை வடித் **தேன்**
கண்டு நான் மகிழ்ந் **தேன்**
ஆசையால் சிறிது குடித் **தேன்** மீண்டும் சுவைத் **தேன்**
உள்ளம் களித் **தேன்** உடல் களைத் **தேன்** உடனே படுத் **தேன்**
அதனால் மறந் **தேன்** காலையில் கண்விழித் **தேன்**
அப்படியே எழுந் **தேன்** உங்களை நினைத் **தேன்**
தேனை எடுத் **தேன்** அங்கிருந்து விரைந் **தேன்**
வேகமாக நடந் **தேன்** இவ்விடம் சேர்ந் **தேன்**
தங்கள் வீட்டை அடைந் **தேன்** உங்களிடம் கொடுத் **தேன்**
என் பணியை முடித் **தேன்**
என்றார்.



அதற்கு தேன் பெற்றவர், தேனினும் இனிமையாக உள்ளது உமது விடை இதனால்தான் நம் முன்னோர்கள் தமிழைத் **தமிழ்த்தேன்** என்று உரைத்தரோ எனக் கூறி மகிழ்ந் தேன் என்றார்.

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.
2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.
3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.
5. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.

2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.

3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.

4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.

5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.

2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.

3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. புதிதாக தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் மத சார்பின்மையோடு சிறப்பாக ஆட்சிபுரிய ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

# சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. **“ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மேன்மைப்படுத்துவாய். சங். 50:15”** கஷ்ட நோய்ப்படுக்கையில் விடுதலைக்காய் கர்த்தரை நோக்கி மன்றாடும் ஒவ்வொரு இறைமக்களுக்காக இறைவேண்டல் புரிவோம். கோவிட்-19 நோய் அறிகுறியால் தனிமைப்படுத்தப்பட்டு உணவு பராமரிப்பு இல்லாமல் அழுது கொண்டிருக்கும் மக்களை அரசும், திருச்சபைகளும் அடையாளம் கண்டு ஆதரவு தரும்படியாய் இறைவேண்டல் புரிவோம். மிக விரைவாக மருந்து அனைத்து மக்களுக்கும் தரப்பட்டு நோய்தொற்று முற்றிலும் நீங்கும்படியாய் மரணத்தின் பிடியிலிருந்து மக்கள் காக்கப்படும்படியாய் இறைவேண்டல் புரிவோம்.
2. கோவிட்-19 என்னும் கொடும் நோய் கண்டு அஞ்சாமல் தங்கள் பணிகளை உண்மையாய் நிறைவேற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ உதவியாளவர்கள், சுகாதர துறை ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள், காவல்துறையினர் மற்றும் இப்பணியில் நேரிடையாக தங்களை இணைத்துள்ள அனைத்து ஊழியர்களுக்காகவும் இறைவேண்டல் புரிவோம்.
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
4. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

# அனுதின மன்னா – அக்டோபர் 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **அக். 1** | **வெள்ளி** | **ஏசாயா 61:1-7** | **ஏசா. 61:1(b)** | **மத்தேயு 5-7** |
| அக். 2 | சனி | ஏசாயா 6:1-8 | ஏசா. 6:8 | மத்தேயு 8-9 |
| அக். 3 | ஞாயிறு | யாத். 1:15-22 | யாத். 1:17 | மத்தேயு 10-12 |
| அக். 4 | திங்கள் | யாத். 3:7-12 | யாத். 3:10 | மத்தேயு 13-15 |
| அக். 5 | செவ்வாய் | யாத். 4:1-9 | யாத். 4:8 | மத்தேயு 16-17 |
| அக். 6 | புதன் | எபிரெயர் 5:1-10 | எபிரெயர் 5:4 | மத்தேயு 18-20 |
| அக். 7 | வியாழன் | நெகே. 2:11-18 | நெகே. 2:18 | மத்தேயு 21-22 |
| **அக். 8** | **வெள்ளி** | **நியா. 6:11-18** | **நியா. 6:18** | **மத்தேயு 23-24** |
| அக். 9 | சனி | 1சாமு. 2:18-21 | 1சாமு. 2:18 | மத்தேயு 25-26 |
| அக். 10 | ஞாயிறு | நியா. 13:1-7 | நியா. 13:5(b) | மத்தேயு 27-28 |
| அக். 11 | திங்கள் | எசேக். 33:1-9 | எசேக். 33:7 | மாற்கு 1-3 |
| அக். 12 | செவ்வாய் | தானி. 1:8-17 | தானி. 1:8 | மாற்கு 4-6 |
| அக். 13 | புதன் | ஏசாயா 52:1-12 | ஏசாயா 52:7 | மாற்கு 7-9 |
| அக். 14 | வியாழன் | எபேசி. 4:17-24 | எபேசி. 4:24 | மாற்கு 10-13 |
| **அக். 15** | **வெள்ளி** | **பிலிப். 4:14-20** | **பிலிப். 4:17** | **மாற்கு 14-16** |
| அக். 16 | சனி | மாற்கு 1:13-18 | மாற்கு 1:15 | லூக்கா 1 |
| அக். 17 | ஞாயிறு | லூக்கா 4:16-22 | லூக்கா 4:21 | லூக்கா 2-3 |
| அக். 18 | திங்கள் | மத்தேயு 20:17-28 | மத். 20:28 | லூக்கா 4-5 |

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| அக். 19 | செவ்வாய் | மாற்கு 8:31-38 | மாற்கு 8:34 | லூக்கா 6-7 |
| அக். 20 | புதன் | மாற்கு 9:33-37 | மாற்கு 9:35 | லூக்கா 8-9 |
| அக். 21 | வியாழன் | யோவான் 10:7-16 | யோவா.10:16 | லூக்கா 10-11 |
| **அக். 22** | **வெள்ளி** | **லூக்கா 10:30-37** | **லூக். 10:34** | **லூக்கா 12-13** |
| அக். 23 | சனி | யோவான் 10:7-16 | யோவா.10:16 | லூக்கா 14-16 |
| அக். 24 | ஞாயிறு | அப். 7:55-60 | அப். 7:60 | லூக்கா 17-18 |
| அக். 25 | திங்கள் | அப். 9:1-20 | அப். 9:15 | லூக்கா 19-20 |
| அக். 26 | செவ்வாய் | அப். 16:11-15 | அப். 16:14 | லூக்கா 21-22 |
| அக். 27 | புதன் | 2தீமோ. 2:11-19 | 2தீமோ. 2:15 | லூக்கா 23-24 |
| அக். 28 | வியாழன் | 2தீமோ. 4:1-8 | 2தீமோ. 4:5 | யோவான் 1-3 |
| **அக். 29** | **வெள்ளி** | **2கொரி. 4:1-10** | **2கொரி. 4:5** | **யோவான் 4-5** |
| அக். 30 | சனி | 1பேதுரு 5:6-11 | 1பேதுரு 5:10 | யோவான் 6-7 |
| அக். 31 | ஞாயிறு | மத்தேயு 28:16-20 | மத். 28:19 | யோவான் 8-9 |
| நவம்பர் 1 | திங்கள் | எபேசியர் 3:14-21 | எபேசி.3:14,15 | யோவா. 10-11 |
| நவம்பர் 2 | செவ்வாய் | உபா. 12:1-7 | உபா. 12:7 | யோவா. 12-13 |
| நவம்பர் 3 | புதன் | எண். 33:50-56 | எண்.33:54(b) | யோவா. 14-15 |
| நவம்பர் 4 | வியாழன் | 1சாமு. 20:1-17 | 1சாமு. 20:16 | யோவா. 16-17 |
| **நவம்பர் 5** | **வெள்ளி** | **யோசு. 21:41-45** | **யோசு. 21:45** | **யோவா. 18-19** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**